DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.111/2025**

PROSECUTION WITNESS No. 7

| | |
|---|---|
| Name | : Dr.Rajesh |
| Father's Name | : Krishnamoorthy |
| Age | : 39 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 27th day of November, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.02.2024 அன்று பணியில் இருந்தபோது H–5 புதுவண்ணாரப்பேட்டை காவல்நிலைய குற்ற எண் 65/2024 என்ற வழக்கில் இறந்தநபர் தமிழ்வாணன் சுமார் 41 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை பிரேதப்பரிசோதனை செய்யக் கோரி காவல் உதவி ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தினை பெற்று அன்றையதினம் காலை 11.50 மணிக்கு தலைமைக்காவல் விஜய்ஆனந்த் HC 36674 என்பவர் மூலம் பெற்றேன். அன்றைதினம் அவர் இறந்தநபரை அடையாளம் காட்ட பிரேதப்பரிசோதனையை முற்பகல் 12.00 மணியளவில் தொடங்கினேன். பிரேதம் மிதமான உடல்வாகுடன் காணப்பட்டது. பிரேதத்தின்மீது மருத்துவமனையில் சிகிச்சை அளித்தற்கான அடையாங்கள்

காணப்பட்டது. பிரேதத்தின்மீது பிணவிறைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதத்தின் நகக்கண்கள் நீளநிறம் தோய்ந்து காணப்பட்டது. பிரேதத்தின்மீது காணப்பட்ட இறப்பிற்கு முந்தைய வெளிப்புற காயங்கள்

1. சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 7x2 செ.மீ வலது முழங்காலில் காணப்பட்டது.

2. சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 1x1 செ.மீ வலது காலின் மேல்புறத்தில் காணப்பட்டது.

3. சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 1x1 செ.மீ இடது கணுக்காலின் முன்புறத்தில் காணப்பட்டது.

4. செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 5x0.5 செ.மீ இடது புஜத்தின் பின்புறம் காணப்பட்டது.

5.செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 2x0.5 செ.மீ இடது புஜத்தின் பின்புறம் காணப்பட்டது.

6.செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 11x0.5 செ.மீ இடது புஜத்தின் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

7.செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 4x0.5, 5x0.5 செ.மீ இடது புஜத்தின் வெளிப்புறம் காணப்பட்டது.

8.செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 10x0.5 செ.மீ இடது புஜத்தின் உட்புறத்தில் காணப்பட்டது.

9.செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 4x0.5 செ.மீ 8x0.5 செ.மீ இடது புஜத்தின் முன்புறத்தில் காணப்பட்டது.

10.செங்குத்தான சிவந்த பழுப்புநிற சீராய்ப்பு காயம் 7x0.5 செ.மீ இடது புஜத்தின் வெளிப்புறத்தின் மேல்பகுதியில் காணப்பட்டது.

11.5.செ.மீ அளவிலான தையலிடப்பட்ட காயம் 7 தையல்களுடன் தலையின் உச்சியில் காணப்பட்டது.

தலைப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் 10x8 செ.மீ அளவிலான தலைத்தோள் அடியாள கன்றிகாயம் தலையின் உச்சியில் காணப்பட்டது. 12.செ.மீ அளவிலான எலும்புமுறிவு மண்டைஓட்டின் உச்சியிலிருந்து இடதுபுறம்வரை காணப்பட்டது. மூளைச் சவ்வு சீராக காணப்பட்டது. மூளையின்மீது ரத்தக்கசிவு உச்சியிலிருந்து பின்புறம் வரை காணப்பட்டது. மூளை சீராக இருந்தது. அதன் வெட்டுத் தோற்றத்தில் புள்ளிவடிவ ரத்தக்கசிவுகள் காணப்பட்டது. மூளை அடிஎலும்பு சீராக இருந்தது. கழுத்துப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் குரல்வளை மற்றும் நாவடி எலும்பு சீராக இருந்தது. நெஞ்சுப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் இதயம் சீராகவும், பெருந்தமனியில் ஒருசில இடங்களில் கொழுப்புத் திட்டுகளுடனும் காணப்பட்டது. நுரையீரல் நீர்கோர்த்த நிலையில் மார்புகூட்டுடன் ஒட்டி இருந்தது. அதன் வெட்டுத் தோற்றத்தில் ரத்தம் கலந்த நுரைபோன்ற திரவம் வடிந்தநிலையில் காணப்பட்டது. சுவாசக்குழாய் மற்றும் உணவுக்குழாய் சீராக இருந்தது. வயிற்றுப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்தபோது இரைப்பையில் 100 கிராம் அளவிலான பச்சைநிற பாதி செரிமானம் ஆன உணவுப் பொருட்கள் எந்தவித நெடியுமின்றி காணப்பட்டது. மற்ற உறுப்புகள் அனைத்தும் சீராகவும் ரத்தம் செறிந்தநிலையிலும் காணப்பட்டது. ரத்தம் மற்றும் உடல் உறுப்புகள் ரசாயன பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. பிரேதப்பரிசோதனை அன்றைதினம் பிற்பகல் 1.00 மணியளவில் முடிக்கப்பட்டு தற்காலிக கருத்தாக இறந்தநபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்துள்ளார் என்றும் இறப்பானது பிரேதப் பரிசோதனைக்கு 12 முதல் 24 மணி நேரத்திற்கு முன்பாக நேர்ந்திருக்ககூடும் என்றும் இறுதிக்கருத்து ரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு வழங்கப்படும் என்று கருத்துரை வழங்கியுள்ளேன். மேலும் ரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை

பெறப்பட்டு **மதுவோ, விஷமோ,** கண்டயறிப்படவில்லை என்ற அறிக்கை பெறப்பட்டு பின்னர் இறுதி அறிக்கை 02.03.2024 அன்று இறந்தநபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கலாம் என்றும் இறப்பான பிரேதப் பரிசோதனைக்கு 12 முதல் 24 மணி நேரத்திற்கு முன்பாக நேர்ந்திருக்ககூடும் என்றும் இறுதி அறிக்கை வழங்கினேன். நாள் 01.02.2024 அன்று வழங்கிய பிரேதப் பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.2**. தடய அறிவியல் ஆய்வக அறிக்கை **அ.சா.ஆ.3,** 02.03.2024 அன்று நான் வழங்கிய இறுதி அறிக்கை அ.சா.ஆ.4, குருதி வடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ.5**, என்னிடம் காட்டப்படும் மரக்கட்டையினால் அடிக்கும்போது இறந்தநபருக்கு மேற்கூறிய காயங்கள் ஏற்பட்ட வாய்புள்ளது. இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரேதப் பரிசோதனைக்கு முன்பு எனக்கு விபத்து பதிவேடு, காயச் சான்றிதழ், வழக்கின் வரலாறு ஆகியவை வழங்கப்பட்டதா என்றால் விபத்து பதிவேடு, மற்றும் வழக்கின் வரலாறு வழங்கப்பட்டது. இறந்தவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த கோப்புகளை நான் பார்க்கவில்லை. சீராய்ப்பு காயங்கள் மேலிருந்து கீழாக காணப்பட்டன எனவே அவற்றை நான் செங்குத்தான சீராய்ப்பு காயங்கள் என குறிப்பிட்டுள்ளேன். ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் மேற்படி காயங்களை ஏற்படுத்திருக்க வாய்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. ஒரு நபர் ஓடும்போது எதிர்பாராமல் ஒரு தூண் அல்லது கம்பத்தில் மேதும்போது தலையில் ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்புள்ளது. மூளையில் வீக்கம் எதுவும் காணப்படவில்லை. உயர் ரத்த அழுத்தத்தின் காரணத்தால் மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான் ஆனால் வெளிக்காயம் ஏற்பட வாய்பில்லை. நான் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டிருந்தாலும் பிழைப்பதற்கான வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மத்திய மற்றும் இடதுபக்க தலையில் காயம் உள்ளது வலதுபக்கத் தலையில் இல்லை

என்றால் சரிதான். தலையில் ஏற்பட்ட காயம் **அ.சா.பொ.1** ஆல் ஏற்படுத்தியிருந்தால் **அ.சா.பொ.1 லும்** தரையிலும் ரத்தம் படிந்திருக்க வாய்புள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னிடம் **அ.சா.பொ.1** காண்பித்து விசாரித்தாரா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |